# சுதந்திரப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியம் உயர்வு

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாநில அரசால் வழங்கப்படும் ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. தற்போது, 1024 விடுதலை போராட்ட வீரர்களுக்கு, 15–8–1997 முதல், மாதந்தோறும் ரூபாய் 3000 மாநில அரசின் சார்பில் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேலும் 2251 விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு, மாநில அரசால் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1500 வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம் கடந்த 10 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளது என்பதை கருத்தில் கொண்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு வழங்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 3000 லிருந்து ரூபாய் 4000 ஆகவும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசால் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூபாய் 1500 லிருந்து ரூபாய் 2000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 257.94 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படுமெனினும், நமது நாட்டின் சுதந்திரப் போரில் இவர்களின் அளப்பரிய பங்கினைக் கருத்தில் கொண்டு, இச்செலவை அரசு ஏற்றுக் கொள்ளும்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தாங்கள் பெறும் ஓய்வூதியம் மற்றும் இதர சலுகைகளை உயர்த்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். இவற்றை கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு ஆணையிட்டுள்ளார்கள்.

1. முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்கள், தற்போது பெற்றுவரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூ 6000/–, இனி மாதந்தோறும் ரூ 7000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 1.15 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

2. முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது ஆண்டொன்றுக்கு ரூ 3000/– மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி ஆ்ண்டொன்றுக்கு ரூ.4000/–ஆக வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 10 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

3. 1.4.1999—லிருந்து இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப ஒய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ 3000 வழங்கப்பட்டு வருகிறது. 1.4.1999க்கு முன்பாக இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையை ஏற்று, 1.4.1999க்கு முன்பு இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு, 1.4.2007 முதல் மாதந்தோறும் ரூ 3000 குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். இதனால் சுமார் 350 முன்னாள் சட்டமன்ற பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 1.26 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

4. டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு தற்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை அடிப்படையில் வாடகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களும் தாங்கள் டெல்லி செல்லும்போது, தமிழ்நாடு

இல்லத்தில் தங்குவதற்கு சலுகை அடிப்படையில் வாடகை கட்டணம் நிர்ணயிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அந்தக் கோரிக்கையினையேற்று, தற்போது முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களிடம் எந்த அளவிற்கு வாடகை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறதோ, அந்தக் கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகையாக வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் தினப்படி ரூ 400–லிருந்து ரூ.500–ஆக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ 20 இலட்சம் செலவு ஏற்படும்.

6. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு ரயில் பயணப்படியாக ஆண்டொன்றுக்கு ரூ 15000/– வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி, இனி ஆண்டொன்றுக்கு ரூ 20000/– ஆக வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ 12 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

7. மறைந்த சட்டப் பேரவை உறுப்பினர் கே.ஆர். நல்லசிவம் அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்படும் என்று நேற்றையதினம் சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, இரண்டு இலட்சம் ரூபாய் கே.ஆர். நல்லசிவம் அவர்களின் துணைவியாருக்கு உதவிநிதியாக வழங்குவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே

நான் அறிவித்த சலுகையான 1–4–1999ஆம் தேதிக்கு முன்னதாக இயற்கை எய்திய சட்டப் பேரவை உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும் குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் 3000 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பையொட்டி, திரு. கே.ஆர். நல்லசிவம் அவர்களின் துணைவியார் மாதந்தோறும் 3000 ரூபாய் குடும்ப ஓய்வூதியம் பெறுவார்கள்.